விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 2 ஜுல்ஹஜ் 19 இதழ்246
யாழ்ப்பாணம் ஞாயிற்க்கிழமை 18 10-1981

## யாழ். வீதிகளில்

# கடற்படை-பொலிஸ் கூட்டு ரோந்து!

பொலிஸ் ரோந்து நடவடிக் பாதுகாப்பு அமைச்சு மேற் கைக்கான ஏற்பாடுகளைப் கொண்டுள்ளது.

## உயர் அதிகாரிகளுடன் இராணுவதளபதிஆலோசனை

(கொழும்பு)

யாழ், கே. கே. எஸ். வீதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைபடுத்து வட பகுதியில் எழுந்துள்ள பதற்றநிலையைச் சமாளிக்க யாழ் மாவட்ட வீதிகளில் பொலிசாருடன் கடற்படையினரை கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் முயற்சிகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். வீதிகளிலிருந்து இராணுவத்தினரை படிப்படியாக வாபஸ் பெற்று கடற்படை

யாழ்ப்பாணம் ... இச்சூட்டுச் சம்பவத்தை யாழ். இராணுவ துப்பாக்...

(6-ம் பக்கம் பார்க்க)

# நிலைமை குறித்து யாழ். மாவட்ட எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

**"யாழ் மாவட்டத்தில் கடந்த இருதினங்களாக ஆயுதப்படையினரின் வன்முறைச்சம்பவங்களினால் பொதுமக்கள் 150 பேர் காயமடைந்துள்ளனர்- இவர்களில் சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்- மினி பஸ்களும் தனிப்பட்ட வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன- கடைகள் யாவும் மூடப்பட்டுள்ளன- வழமையான வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது- எனவே இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்"**

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசாவும், யாழ் மாவட்ட எம். பி.க்களும் கூட்டாக ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு நேற்று அனுப்பியுள்ள அவசர தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இத்தந்தியில் மாவட்ட சபை தலைவர் திரு எஸ். நடராசா, யாழ். மாவட்ட எம்.பிக்களான திருவாளர்கள் எம். சிவசிதம்பரம் வி. யோகேஸ்வரன், வி. தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம், கே. துரைரத்தினம், ஏ. திருநாவுக்கரசு, வி. என். நவரத்தினம் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கடந்த இரு தினங்களாக ஆயுதப்படையினர் நடத்திவரும் வன்செயல் சம்பவங்களில் முக்கியமான சிலவற்றை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தாக்குதல் சம்பவங்களின் போது 150 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் சிலர் துப்பாக்கி முனைகளால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவு, யாழ். தபால் நிலையத்திற்கு அண்மையில், பஸ்நிலையம், பண்ணைப்பலம், காங்கேசன் துறை பஸ் நிலையம்

(6-ம் பக்கம் பார்க்க)

## அரச அதிபரிடம் தெரிவிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றி பொதுமக்கள் யாழ். அரச அதிபர் அல்லது செயலகத்திலுள்ள சிரேஷ்ட அதிகாரியிடம் தகவல் கொடுக்கலாம்.

அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். பொலிஸ், ராணுவ அதிகாரிகளிடம் தகவல் தெரிவிக்க விரும்பாவிடில் தம்முடன் தொடர்புகொள்ளலாம் என்றும் பெயர்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்புசபை கூடியது

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு நிலைமையை ஆராய்வதற்கா நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்தன தலைமையில் பாதுகாப்புச்சபை கூடியது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமானவர்களின் சடலங்கள் அவர்களின் ஊர்களுக்குக் கொண்டு செல்லப்படும்போது அசம்பாவிதச் சம்பவம் ஏதும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சம்பந்தப்பட்டவர்களின் மரணச் சடங்குகளில் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு அமைதியைப் பாதுகாக்கவேண்டுமென ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

வ போ ச மாநாடு:

## பஸ் ஊழியர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

### காயமடைந்தவருக்கு நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

பஸ் ஊழியர் இருவர் ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, பஸ் சேவை ஸ்தம்பிதமடைந்ததால், இதுபற்றி ஆராய மாநாடு ஒன்று நேற்றுக்காலை வட பிராந்திய போக்குவரத்து சபை தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் வட பிராந்திய போக்குவரத்து சபை தலைவர் எஸ். கனகரத்தினம், பொலிஸ் அதிபர் திரு மகத், அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, ஐதிக சேவ சங்க பிரதிநிதிகள், ஊழியர் பேரவை பிரதிநிதிகள், யாழ். மாவட்டசபை தலைவர் திரு. எஸ். நடராசா, செயலாற்றுகுழு அதிகாரி திரு. எஸ். இராசேந்திரம் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. கே. தனபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பஸ் ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக பொலிஸ் அதிபர் ஜனுப் மகத் உறுதியளித்ததை தொடர்ந்து, வழமைபோல் மீண்டும் பஸ் சேவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

காயமடைந்த இருபஸ் ஊழியர்களுக்கும் நஷ்டஈடாக தலா 250ரூபா வழங்குவதென்றும் இம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. மா-

## யாழ். நகரில் 3 கடைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 கடைகள் சேதப்படுத்தப் பட்டதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கு புகார் செய்யப் பட்டது.

இது தொடர்பாக அரசாங்க அதிபர், இராணுவ உதவி காப்டனின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 3 தேநீர்க் கடைகளே சேதப் படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. (மா-கு)

நாச்சிமார் கோவில் பகுதியில்

# இராணுவத்தினர் வீடுகளில் திடீர் சோதனை நடத்தினர்!

### அடையாள அட்டையுடன் ஆண்கள் கோவிலில் கூடினர்

(கோண்டாவில)

நாச்சிமார்கோவிலடிப் பகுதியில நேற்று முன்தினம் இராணுவத்தினர் முற்றுகையிட்டு, அப்பகுதியிலுள்ள வீடுகளில திடீர்சோதனை நடத்தினார்கள்.

சபாபதி வீதி, நாச்சிமார் கோவில வீதி, காங்கேசன் துறை வீதி ஆகியவற்றிற்கு உட்பட்ட பகுதியே சோதனைக்குள்ளாகின.

சுமார் 3 மணி நேரம் இந்த திடீர் சோதனை இடம்பெற்றது.

18 வயதிற்கும், 40 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் யாவரையும் நாச்சிமார்கோவில முன்றலில அடையாள அட்டையுடன் வரும்படி இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

ஆண்கள் கோவில் முன்றவில் கூடியதும், அப்பகுதி வீடுகள் யாவும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதனால் அப்பகுதியில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது. இச் சோதனையைவிட்டு பயப்படத் தேவையில்லையென்று இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததைத் தொடர்ந்து சோதனை தொடர்ந்து நடைபெற்றது.

இச் சோதனையின் போது செம்புக்கம்பி, மற்றும் திருட்டுப் பொருட்களை வைத்திருந்தவர்கள் சிக்கிக்கொண்டனர், இவர்களை பொலிசார் கைது செய்தனர். (க)

## புதுடில்லியில் "அமிர்"

புதுடில்லி, அக். 17

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தாய்வானிலிருந்து புதுடில்லி வந்துள்ளார். இ

வெற்றிடங்கள்

1. முகாமையாளர்
2. சிட்டை எழுதுநர்
3. "டாக்றூம்" வேலை தெரிந்தவர்கள்.

யாழ் நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய ஸ்ருடியோவிற்கு அனுபவமுள்ள ஆண்;பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் 21-10-81ம் திகதிக்கு முன்னர் கோரப் படுகின்றன.

05, சிறும்பையடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

1253

விரையுங்கள்! தீபாவளி மலிவு விற்பனை

கௌரிகரமாகத் திகழ்ந்திட கௌரி ரெக்ஸ்ரைல்ஸ் பிடவைகளை நாடுங்கள்!

கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்

155, 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7457. (1189)

### உள்ளூராட்சி ஊழியர்களின்

# மரணப் பணக் கொடை வழங்குவதில் இழுபறி

## அபிவிருத்திக் கூட்டத்தில் யோகேஸ் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

"உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு இறந்தபின் மரண பணக்கொடை வழங்குவதில் பெரும் இழுபறி ஏற்படுகிறது." என்று யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ். அபிவிருத்தி சபையின் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்றின் மீது பேசுகையில் கூறினார்.

யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நடேசு, இராஜேந்திரன் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

தீர்மானத்தின் விபரம் வருமாறு:

தெல்லிப்பழை கிராமசபை அலுவலகத்தில் உள்ளூராட்சி சேவையைச் சேராத இரவுக் காவலாளியாகக் கடமையாற்றி வந்த திரு. பொ. சம்பந்தமூர்த்தி தமது சேவைக்காலத்தில் 78-10-16-ல் மரணமடைந்துள்ளார். அன்னாரின் மரணத்தை யொட்டி மரண நன்கொடை வழங்கும்படியும் தாம் வேறு எவ்வித வருமானங்களும் இன்றி மிகவும் கஷ்டமான நிலையிலிருப்பதாகவும் அன்னாரின் மனைவி திருமதி தங்கம்மா சம்பந்தமூர்த்தி என்பவர் விண்ணப்பித்துள்ளார். தெல்லிப்பழை கிராம சபையில் ஓய்வூதியம் வழங்குவதற்கான உபவிதிகள் எதுவும் இல்லை. இவர் தனது சேவைக் காலத்தில் தனது கடமையைச் சிறப்பாக ஆற்றியுள்ளார். அவரது சேவையைக் கருத்திற்கொண்டு குடும்பம் கஷ்டமான நிலையில் இருப்பதால் அன்னாரின் மனைவிக்கு அவர் இறுதி மாதத்தில் பெற்ற திரட்டிய வேதனத்தில் ஒருவருடத் தொகையாகிய 4282 ரூபா 90 சதத்தை மரண நன்கொடையாக வழங்க வேண்டும்.

இத்தீர்மானத்தின் மீது திரு. யோகேஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"புங்குடுதீவில் உள்ளூராட்சிமன்ற ஊழியர் ஒருவர் மின்னொழுக்கால் மரணமானார். அவருக்கு 5 வருஷகால நன்கொடை பணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது என்றும் இப்பணத்தைப் பெறுவதற்கு இறந்தவரின் உறவினர்கள் கொழும்பில் வழக்கறிஞர் ஒருவரை வைத்து 8 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

'78ல் ஒதுக்கிய 4000 ரூபாவும் 81-ம் ஆண்டில் 1000 ரூபாவுக்குக்கூடப் பெறுமதியில்லை. மரண சகாய நிதி மேன்முறையீட்டுக்கு இடம் வைக்காமல் உடனடியாக வழங்கப்படவேண்டும்.

இதுசம்பந்தமாக ஆணையாளர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சொன்ன அபிவிருத்திசபைத் தலைவர் மன்றங்களில் பணமில்லாததால் தாமதம் ஏற்படுகிறதென்று தெரிவித்தார்.

இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. [மா]

## பிறந்ததின வாழ்த்து

அளவெட்டி தெற்கு S. திருச்செல்வநாதன் தம்பதிகளின் செல்வப் புதல்வி

வரதவாணி

தனது (18-10-81) முதலாவது பிறந்த தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, ஐயையா, அன்ரி, மாமன்மார், அண்ணைமார், அக்கா ஆகியோர் அனைவரும் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள். (1240)




## முக்கிய அறிவித்தல்

### அமெரிக்க முனிவர் யாழ்ப்பாணம் வருகை

யோகசுவாமியின் சீடரான ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளும் பல அமெரிக்க யாத்திரீகர்களும் 13-01-1982 புதன்கிழமை பிற்பகல் அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்துக்கு வருகை தந்து 8 நாட்கள் வரை தங்குவார்கள். அவர்களைத் தங்கள் சமய ஸ்தாபனங்கட்கு வரவழைக்க விரும்புபவர் எங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்

ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம்

கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
தொலைபேசி: சுன்னாகம் 246 1218

## பட்ஜெட்டுக்கு முந்துங்கள்

### சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்

SISIL REFRIGERATORS

- ஒரு வருட தயாரிப்பாளரின் உத்தரவாதம்
- எல்லா உறுப்புக்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
- மிகக்குறைந்த விலையில் ஒருசிறந்த பொருள்
- திருத்துதல், பெயின்ற் அடித்தல்

திறமான முறையில் வெகு விரைவில் நியாயமான செலவில் பயிற்சி பெற்ற வேலையாட்களால் செய்து கொடுக்கப்படும்.

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

### சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## பொறியியல் பரிசோதகர் நேரில் விஜயம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் ஊழியர் ஒருவர் மின்தாக்கி பரிதாபகரமாக மரணமானது குறித்து யாழ். கைவிட்ட தொழிற்சாலை பொறியியல் பரிசோதகர் திரு. வி. கே. வாமதேவா தொழிற்சாலைக்கு விஜயம் செய்து விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தினார்.

விபத்து ஏற்பட்ட விதம் அதற்கான காரணம் பற்றி வெகுசம் ஆராய்ந்து அவை அனைத்தையும் குறித்த விபரங்களையும் சேகரித்துக்கொண்டார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இ. பத்மநாதன் என்னும் நற்காலிக தொழிலாளியே இவ்விதம் விபத்தில் சிக்கி மரணமானவராவார்.


நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

110, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
போன்: 7199. தந்தி: வைரம்.


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள EN நாலாயிரத் தொடர் மொறிஸ் மைனர் விற்பனைக்குண்டு. விலை: 23,000 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 131, கிரேசன் ரோட், வவுனியா. [1206]

சாவகச்சேரி தபாற்கந்தோர் ரோட்டில் 1-ம் கட்டை ஒழுங்கையில் வசதிகளுடன் வீடு கட்டக்கூடிய 15 பரப்பு காணி முழுவதோ துண்டுகளாகவோ விற்கப்படும். விபரங்கட்கு: ந. கிருஷ்ணசாமி நிலஅளவையாளர், பேரம்பலம் வீதி, கச்சாய் ரோட், சாவகச்சேரி. (1225)

நாவலர் வீதியில் கே. கே. எஸ். ரோட்டிற்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு, S நடராசா 177, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1256)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சகல மின் பாவனையாளர்களிற்குமான

### அறிவித்தல்

மின் கட்டணங்களை மீளவாய்தல்

இலங்கை மின்சாரசபையின் விநியோகித்தலுக்காக விற விடப்படும் கட்டணங்களை அதிகரித்துள்ளமையால் இம்மாநகராட்சி மன்றமும் 1-10-81 தொடக்கம் சகல தேவைகளுக்குமான மின் பாவனைக்குரிய கட்டணங்களையும் குறித்த திகதியிலிருந்து மீளாய்வு செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை இம்மீளாய்வுக்கும் 1-10-81லிருந்து அதிகரித்த கட்டணங்களையும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வித்தியாசங்களையும் சேருவதற்குப் பாதகமின்றியே பாவனையாளர்களுக்கு பில்கள் வழங்கப்படும்.

சி. வி. கே. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகராட்சி மன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்,
14-10-81. 1248

## துருக்கியில் அரசியல் கட்சிகளுக்குத் தடை!

அங்காரா, அக் 17

துருக்கி இராணுவ அரசு அங்குள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் தடை விதித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதிய சட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ர]

## நூல்கள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர பொது நூல் நிலையத்துக்கு ஜமா அத்தே இஸ்லாமி சயிதிகள் மன்றம் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான 125 விலையுயர்ந்த புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (மா)

### விற்பனைக்கு

புதிய 84 Sri Yamaha-Y B80 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: Dr வி. விநாயகமூர்த்தி, 9, விக்டோறியா வீதி, யாழ்ப்பாணம். (1257)

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் வீடுகட்டுவதற்குப் பொருத்தமான 4 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு, ஒருமித்தும், பிரித்தும் வாங்கலாம். இருபாதை வசதி உண்டு. விபரங்களுக்கு: எம். சோமசுந்தரம், 82/5, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1241

சகல வசதிகளுடன் கூடிய புதிய வீட்டுடன் இரண்டரைப் பரப்பு காணி தட்டாதெரு பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள: க. சந்திரமோகன், டிலோனி கிழக்கு, தும்பளை வீதி, பருத்தித்துறை. 1198

இரண்டுக்கல் இரும்புப் பெட்டி 2 X 2 1/2 அடி லாக்குடன் மிகவும் உன்னத நிலையில் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீதேவி ரிம்பர் டிப்போ, 28, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7866. 1250

செல்லமுத்து வீதியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, அரசாங்க ஆஸ்பத்திரி என்பவற்றுக்கு அண்மையில் ஏழு பரப்புக் காணி வீட்டுடன் (9 அறைகள் கொண்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: R. சேனாதிராஜா, C/o R. ரட்ணராஜா, தபால் அதிபர், பிலியந்தலை அல்லது R. தேவராஜா, "ராஜகிரி", பழைய தபால் கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (பென்சன் பிரிவு, கச்சேரி, யாழ்ப்பாணம்) 1180

### தேவை

மிக விரிவாக அமைந்துள்ள எமது ஸ்தாபனத்தில் பங்காளராக சேர்ந்துகொள்ள விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் ரேட் அன்ட் லேஜ்மன் சேவிசஸ் இல. 72 கஸ்தூரியார் வீதி, நாவாந்துறை யாழ்ப்பாணம். 1243

தச்சுவேலை செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் நிரந்தரமாக வேலைக்குத் தேவை. விண்ணப்பிக்க வேண்டியமுகவரி: முகாமையாளர், யாழ். ரிம்பர் றேடிங் அன்ட் இண்டஸ்றீஸ், சங்கானை வீதி, அச்சுவேலி. 1221

சேலை அச்சிடும் தொழிலில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. தையல்வேலையும் தெரிந்திருப்பின் விரும்பத்தக்கது. யாழ். மாநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் மாத்திரம் 24-10-81க்கு முன் விண்ணப்பிக்கவும். முகாமையாளர், வசந்தா ரெக்ஸ்ரயில்ஸ், 42, கல்லூரிவீதி, நீராவியடி. 1239

சமையல் வேலைக்கு (மரம்) அனுபவம் உள்ள ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும். கிருஸ்ஸ் ஹண்டி கிறுப்ஸ், 584 துண்டி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [1259]

# கே. பி. ஹரன்

"சுயநலப் பற்றற்று நாட்டிற்கு நற்பணி புரியும் பரந்த மனப்பான்மையுடன் பத்திரிகையாளன் செயற்படும் போதுதான் பத்திரிகைகள் நாட்டுக்கு பயனுள்ள சேவை செய்யமுடியும்"

"மகாத்மாகாந்தியின் இந்த வரைவிலக்கணத்தை தாரக மந்திரமாகக் கொண்டு அரை நூற்றாண்டுக்கு மேல் நற்பணிபுரிந்த அமரர் கே. பி. ஹரன் தமது 75வது வயதில் மறைந்த செய்தி அவருடைய அளப்பரிய சேவையை மதித்துவந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கும் நண்பர்களுக்கும் அதிர்ச்சியும் கவலையும் ஊட்டும் செய்தியாகும்.

நல்ல கருத்தை நிதானத்துடனும், தெளிவுடனும் எடுத்து கூறத்தயங்காத பத்திரிகையாளன் அமரர் ஹரன் என்றால் அதுமிகையாகாது.

வேகத்துடனும் விவேகத்துடனும் தொழிற்பட வேண்டுமென்ற கோரிக்கையை அடிக்கடி புதுப்பிக்கும் நிர்வாக ஆசிரியர், கேள்விச் செவியனூரைக்கெடுக்கும் முயற்சியில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதையும் வற்புறுத்தி வந்தார், "when in doupt, leave out" என்ற ஆங்கிலக் 'குறளை' அழகாக நினைவுறுத்தும் காட்சி நெஞ்சைவிட்டகலாத காட்சி.

சுய நலத்துக்காகவும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டுமே பத்திரிகைகள் இயங்கக் கூடாதென்று 'ஈழநாடு' பத்திரிகையின் ஸ்தாபகர்கள் திரு. கே. சி. தங்கராசா, அவர் சகோதரர் அமரர் டாக்டர் சண்முகரத்தினம் கொண்ட பெருநோக்கை கடைப்பிடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர் ஆசிரியர் ஹரன் அவர்கள்.

இம் மும்மூர்த்திகளும் ஒன்றுபட்டு இயங்கிய காலம் பத்திரிகையின் 'பொற்கால'மென்று கூறலாம்.

எதிர்பாராத விதத்தில் தமது 23-வது வயதில் இளம் பட்டதாரியாக பத்திரிகைச் சேவையில் நுழைந்த இந்த மாமனிதன் சுமார் ஐம்பது வருடம் இத்துறைக்கு இயல்பாகவுள்ள இன்னல்கள் அத்தனையையும் தெய்வ நம்பிக்கையுடன் எதிர்நோக்கி வெற்றி கண்டாரென்று சொல்லலாம்.

தமிழகத்தில் பத்து வருடமும், கொழும்பில் இருபது வருடமும், யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ இருபது வருடமும் தொழில் புரிந்த காலத்தில் உலகில் பல பாகங்களைப் பார்வையிடவும், உலக விவகாரங்களை சமத்துவ நோக்குடன் அணுகவும் வாய்ப்புப் பெற்றிருந்தார். லண்டனில் பிரபல பத்திரிகைகளின் வளர்ச்சி பற்றிய அடிப்படை இரகசியங்களை கருத்துப் பரிமாறல் மூலம் நேரில் அறிந்தார்; இந்தியாவின் அன்றைய பிரதமர் நேருவுடன் கைகுலுக்கி அளவளாவவும் வாய்ப்பைப் பெறும் பேறெனக் கருதினார்.

இயல்பாகவே காந்தியதத்துவத்தில் மோகங்கொண்ட ஹரன் கதர் உடையுடன் மகாத்மாவின் நகைச்சுவையை நன்கு இரசித்த அந்தப் பாணியில் அவர் எழுதி வைத்த "ஐயாறன்" கலத்தை அமைத்து வைத்தார். சிறந்த கருத்துக்களை இலகுவான, இறுக்கமான தமிழில் தலையங்கம் எழுதுவதும், தினசரி விவகாரங்களை நுணுக்கமான முறையில சுவையான ஹாஸ்ய நடையில எழுதுவதும் அவர் கையாண்ட உத்திகள். கடைசிவரைக்கும் அவர் 'ஐயாறனை'க் கைவிட்டதில்லை.

களைத்துச் சோம்பியிருந்த நேரத்தில் தமது அறைக்கு அன்பரொருவரை அழைத்து உலலாசமாகப் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த அன்பர் செய்த உதவிகள் இரண்டிற்கும் பகிரங்கமாக நன்றி கூறினார். ஒன்று தம்மை ஆழ்ந்த நித்திரைக்கு ஆளாக்கியது. இரண்டு தம்முடைய அரிய நூலொன்றை 'அபேஸ்' பண்ணியது. அதனை திருப்பித் தரும்படி அழைப்பும் விட்டார். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பதை நாம் ஹரனில் கண்டதுபோல் வேறெவரிலும் காணவில்லை. 'ஈழநாடு' அண்மையில் கண்ட அசம்பாவிதங்களைக் காணாத பெரும்பேறுபெற்ற எங்கள் பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய நல்லாசிரியர், புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறவழிந்திட்டவதியுறுமல் 'அஞ்சேல்' என்ற ஐயாறனின் அபயம் பெற்று அவரின் திருவடியில் அமைதி பெறுவாரென்பது திண்ணம்.

## அமெரிக்க முனிவர் யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளது அந்தரங்க சீடரும் சிவநெறியினை உலகெங்கும் பரப்பிவருபவருமாகிய மாஸ்டர் சிவாய சுப்பிரமுனிய சுவாமி 36 அமெரிக்க சீடர்களுடன் 1982-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி கூட்டுறவாளர் வீதி அளவெட்டியிலுள்ள ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்துக்கு வருகை தருவார். அங்கு 7 நாட்கள் வரை தங்கி இருந்து திருவருள் மிக்க திருக்கோவில்கள் பலவற்றைத் தரிசிப்பதுடன் சிவனடியார்களையும், சிவநெறிப் பெரியோரையும், அன்பர்களையும் சந்திப்பார்.

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் ஹவாய்த் தீவுகளில் ஒன்றாகிய குவாய்த் தீவில் தூய வையிலுவ நதிக்கரையில் சைவ ஆதீனமும் சன்மார்க்க நிலையமும் நடராஜப் பெருமானுக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் கோயில்களும் அமைத்து தவவாழ்க்கை வாழ்ந்து வருகிறார். அவரும் அவரைச் சார்ந்த சுவாமிகளும் சாதகர்களும் சைவ ஆகமங்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் கற்றுணர்ந்து சைவசமய உண்மைகள் எல்லாவற்றையும் யாவரும் எளிதில் உணரக்கூடிய வகையில் ஆங்கில மொழியில் பலப்பல பிரசுரங்கள் மூலம் பரப்பி வருகிறார்கள்.

சுவாமிகளின் அருளுரைகளைப் படித்த பல்லாயிரம் சைவ சமயத்தவர்கள் தங்கள் சமயத்தின் முடிவிலாப் பெருமைகளை உணர்ந்து தங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தி உள்ளார்கள், இவை யாவற்றையும் அவர் யோகர் சுவாமிகளின் திருக்குறிப்பின் பிரகாரம் செய்து வருகின்றார்.

### மக்கள் கருத்து

## சீமெந்துக்கு வரி: முன்யோசனையற்ற முடிவு!

காங்கேசன்துறையில் உற்பத்திசெய்யப்படும் சீமெந்து வகைகளுக்கும் மற்றும் பொருட்களுக்கும் அவை வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படும் போது வரிவிதிப்பதென யாழ் அபிவிருத்திச்சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இவ்வாறு வரிவிதிப்பதற்கு அபிவிருத்திச் சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இவ்வாறு வரிவிதிப்பதற்கு அபிவிருத்திச் சபைக்கு அதிகாரமிருக்கிறதா? அல்லது இத் தீர்மானத்திற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சரின் ஒப்புதல் கிடைக்குமா என்ற கேள்விகள் ஒருபுறமிருக்க, இத் தீர்மானத்தின் பின்விளைவுகளை நாம் கருத்தில்கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கையின் மொத்த கைத்தொழில் நிலையங்கள் ஒருசிலவே அமைந்துள்ளன. இவ்வாறான நிலைமையில், இப்பகுதியில் அமைந்திருக்கும் கைத்தொழில் நிலையங்களில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களுக்கு இங்குள்ள அபிவிருத்திச்சபைகள் வரிகளை விதிக்குமாயின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமது கைத்தொழில் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு வரிகளை விதிக்கலாம். உதாரணமாக மின்சார உற்பத்திநிலையங்களைத் தமது பகுதிகளுக்குள் கொண்டுள்ள மாவட்டசபைகள் வெளிமாவட்டங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு வரிவிதிக்கலாம். இவ்வாறே ரயர், புடவை, பாற்பொருட்கள் உரவகைகள் போன்ற நூற்றுக்கணக்கான பொருட்களின் மீது வரி விதிக்கப்படலாம். மாவட்டசபைகளிடையே வரிவிதிப்பதற்காக ஏற்படும் போட்டாபோட்டியில் கைத்தொழில்நிலையங்கள் குறைவாகவுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்கள் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள். எனவே சீமெந்துக்கு வரிவிதிப்பதென யாழ் அபிவிருத்திச்சபை எடுத்த தீர்மானம் ஒரு தவறான முன்மாதிரியாகும். இவ்வாறான தீர்மானங்களை எதிர்க்கவேண்டியவர்கள் இத்தகையதொரு தீர்மானத்தை எடுத்திருப்பது ஆச்சரியமாகவுள்ளது. எனவே சீமெந்துக்கு வரிவிதிப்பதென எடுத்த யோசனையை யாழ் அபிவிருத்திச்சபை கைவிடும் என எதிர்பார்க்கின்றோம்.

சீமெந்துத் தொழிற்சாலைக்குக் கல் எடுப்பதால் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு வரிவிதிப்பதல்ல தீர்வு. கல் எடுப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது ஏற்படும் நஷ்டத்தை நிவிர்த்திசெய்ய சீமெந்துக்கூட்டுத் தாபனத்திடம் அல்லது அரசாங்கத்திடம்வேண்டிய நிதிஉதவியைப் பெறவேண்டும்.

த. மகேஸ்வரராசா
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

## அனுராதபுரத்தில் 'அனா' ஆலோசனை

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக, பொலிஸ் மா அதிபர் திரு. அனா செனவிரத்ன மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரிகளுடன் அனுராதபுரத்தில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இம்மாநாட்டில் யாழ். பொலிஸ் அதிபர் ஜனாப் மகத், வட பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. அ நவரத்தினம், யாழ் உதவிப்பொலிஸ் அதிபர் திரு எஸ் நவரத்தினராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு இடமாற்றம்?

(கொழும்பு)

1982ம் ஆண்டுக்கான பொது ஆசிரியர் இடமாற்றத்தின்போது ஒன்பது வருடங்கள் கஷ்டமான பிரதேசங்களில் சேவை செய்துள்ள ஆசிரியர்களை அவர்கள் சொந்தப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்ய எண்ணியுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு. டி. எம். ஹெற்றியாராய்ச்சி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார்.

இவரை இ. த. ஆ. சங்கத்தின் தலைவர் டி. எஸ். கே வணசிங்காவும், நிர்வாகச் செயலாளர் திரு நா. சோதிநாதனும், கல்வி அமைச்சில் சந்தித்த போதே அவர் இவர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இன்று
## உயரப்புலம் சித்திவிநாயகர் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணத் திருநாட்டின் ஆன்மகோடிகளுக்கு இடர்களையும் பிணிகளையும் நீக்கும் பொருட்டு ஆங்காங்கே கோவில் கொண்டுள்ள பதிகளில் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராமத்தில் பழமைவளவு ஆதிவிநாயகர் ஆலயமும் ஒன்று. வன்னியசிங்க மாப்பாண முதலியார், குலசிங்க மாப்பாண முதலியார் ஆகியோர் தங்கள் வழிகுலதெய்வமாயும், கிராமத்திலுள்ளவர்கள் வழிபாட்டுக்காகவும் விநாயகப்பெருமானுக்கு கோவில் கட்டுவித்து இன்புற்று எல்லாவித நித்திய நைமித்தியங்களையும் ஆகமமுறைவழுவாது ஆற்றிவந்தனர். 1870ம் ஆண்டு போர்த்துக்கேயரின் ஆதிபத்திய காலத்தில் பல இந்துக்கோவில்களை சேதப்படுத்தினர். இவற்றில் இக்கோவிலும் ஒன்றாகும்.

அவர்களின் வீழ்ச்சிக்குப்பின் எல்லாக்கோவில்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டு செழித்தோங்கும் சமயம் இக்கோவிலும் மாப்பாண முதலியார் வழித்தோன்றல்களினால் மீண்டும் புனருத்தாரணம் பெற்று நித்திய நைமித்தியங்களும் உற்சவங்களும் நடைபெற்று வரலாயின.

கோவில் கட்டிடங்கள் பழமை வாய்ந்தனவாக பூசகர் உட்செல்லமுடியாத நிலையில் அமரர் திரு சின்னத்துரை முதலியார் இக்கோவிலைப் புதுப்பிக்கும் பேர் அவாவினால் இதற்கென நிதி ஒதுக்கினார். அன்னாரின் சிவபுண்ணிய ஞாபகமாக அன்னாரின் புதல்வர் பொன்னம்பல முதலியாரின் முயற்சி கொண்டு கோவில் நிதிக்குத் தக்கதாக கோவில் புதுப்பிக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று இன்று ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறுகிறது.

அவன் தாள் வணங்கி அவனருள் பெறுவோம்.

— சி. மு.


## இதயம் நிறைந்திருக்கும் எண்ணற்ற பொருட்களுக்கு விரைந்திடுவீர் ★

ஆச்சர் சைக்கிள் றேடியோ • அங்கர் சங்குவீச் • றெட்காப் அயன்
மாளிகைபோல் கவர்ச்சியளிக்கும் வர்ண விளக்குகள் • றேடியோக்கள்
கஸெட்டுகள் • மின் அடுப்புகள் • அலங்காரப் பொருட்கள்
மின் விசிறிகள் • மணிக்கூடுகள் • அன்பளிப்புப் பொருட்கள்
• கல்குலேட்டர்கள்

பேப்பர் வகைகள் • பாடசாலை உபகரணங்கள்
மின்சார இணைப்புக்கள் • எஸ்-லோன் பைப்வகைகள்

நியூஸ் பிரின்ட் • பேங் பேப்பர் • வைற் பிறின்டிங் • கிறேப்
ரிசூ பேப்பர்கள் • கடித உறைகள் • டைப்பிங், டுப்பிளிக்கேற்
வெடிங் கார்ட்டுகள் • பொலித்தீன் வர்ணப்பைகள் இன்னும்
எத்தனையோ பொருட்களுக்கும் ஒரே ஸ்தாபனம்

வட இலங்கையில் இறக்குமதியாளரும், நிகரற்ற ஒப்பந்தகாரரும்

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன அங்கீகாரம் பெற்ற வியாபாரிகள், மின்சார இணைப்பு ஒப்பந்தகாரர்-விற்பனையாளர்)

196, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் எதிரில்)
போன்: 8291, தந்தி: 'வாணர்சன்ஸ்'

தலைமையகம்:
பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு-11. போன்: 24821—28244
லெட்சுமிபவான், 97, ஓல்ஹொட் மாவத்த—கொழும்பு-11

## ஆங்கிலத்திலும் தொழில் நுட்பம்;

## 'சுயமொழிப் பிள்ளைகள் பாதிப்படையலாம்''

(சாவகச்சேரி)

''கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான வெள்ளை அறிக்கை மதிப்பீட்டின் நோக்கங்கள், நடைமுறையிலுள்ள கல்வி நிர்வாக அமைப்பின் குறைகளை இனங்கண்டு அவற்றைச் சீராக்க வெள்ளை அறிக்கையிற் கூறப்பட்ட கருத்துக்களை ஆராய்தலும் அவற்றை சீராக்கலுமாகும்''.

சாவகச்சேரி கல்வியை நிலையம் கல்விச் சீர்திருத்த வெள்ளை அறிக்கை தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போது பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எஸ். நல்லையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

விரிவுரையாளர் திரு வி. ஸ்ரீகந்தராசா உரையாற்றுகையில் கூறியதாவது:- பிரிட்டிஷ் பாராளுமன்றத் தாயகத்தின் எண்ணக்கருக்கள் இந்த வெள்ளை அறிக்கை 37 வருடங்களின் பின்னர் இந்த வெள்ளை அறிக்கை உருவானது பாராட்டக் கூடியது. ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக இதுவரை மேற்கத்தைய மூலாதாரப் பாடசாலைகள் வளர்ச்சியடைய மற்றும் வளர்ப்புப் பிள்ளைகள் போன்ற நிலைகள் விருத்தியடையும் என்றும் தொழில்நுட்பம் ஆங்கிலத்திலும் படிக்கலாம் என்ற முறையினால் சுயமொழிப் பிள்ளைகள் பாதிப்படையலாம் என்றும் அவர் கூறினார்.

## இந்துகலாசார அமைச்சருக்கு பாராட்டு

(சாவகச்சேரி)

உலக இந்து மாநாட்டை கொழும்பில் நடாத்தவுள்ள இந்து கலாசார அமைச்சுக்கும் அதனைச் சார்ந்த நிலைக்களத்திற்கும் இந்து மக்கள் சார்பிலும் மன்றத்தின் சார்பிலும் பாராட்டுதல் வழங்குவதோடு ஏனைய இந்துமத நிறுவனங்கள் எடுக்கும் விழாக்களும் பாராட்டும் ஆதரவும் கொடுக்க வேண்டும்.

சரசாலை இந்து இளைஞர் மன்ற செயற்குழு கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது. நாயன்மார்களின் குருபூசைத் தினத்தன்று சமய அறிஞர்களின் மூலம் ஆலயங்களின் சமயச் சொற்பொழிவுகள் நடாத்தவேண்டும்.

கிராம மக்களுக்கு இறை பக்தியை ஏற்படுத்தி அவர்களை பண்புள்ளவர்களாக்க வேண்டும். [ச]

# பிரிவினைவாதிகளுக்கு அரசு பரிவு காட்டமாட்டாது

## இந்தியப் பிரதமர் எச்சரிக்கை

புதுடில்லி, அக் 17

பிரிவினைவாதிகளுக்கும் தேச விரோத சக்திகளுக்கும் அரசு பரிவு காட்டமாட்டாது. எக் காரணம் கொண்டும் அவர்களுக்கு எதனையும் விட்டுக் கொடுக்கவும்மாட்டாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் தம்மைச் சந்தித்த அகாலிதள் தலைவர்களிடம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மதவிவகாரங்களில் அரசு என்றுமே குறுக்கிடமாட்டாது என்றும் தெரிவித்த பிரதமர் திருமதி காந்தி பிரிவினைவாதிகளுக்கும் தேச விரோத சக்திகளுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தயாராகிறது என்றும் கூறினார். [இ]

# மோஷே தயான் காலமானர்

டெல்அவிவ் அக். 17

இஸ்ரேல் முன்னாள் வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சரும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் மோஷே தயான் டெல் அவிவ் ஆஸ்பத்திரியில் காலமானார். இருதய நோயினால் காலமான இவருக்கு வயது 66.

1956ம் ஆண்டு அரபு - இஸ்ரேலிய யுத்தத்தின் போது இஸ்ரேலிய இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்ற ஜெனரல் தயான் 57ம் ஆண்டு இடம் பெற்ற சிரிய - இஸ்ரேல் யுத்தத்தில் தமது ஒற்றைக் கண்ணை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

67ம் ஆண்டு முதல் 74ம் ஆண்டு வரை வெளிநாட்ட மைச்சராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் கடமையாற்றிய ஜெனரல் தயான் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட இருதய நோய் காரணமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டனரே மரணமானார். (இ)

## 'றக்' விபத்தில் 50 பேர் பலி!

புதுடில்லி, அக். 17

சிக்கிமில் நடைபெற்ற றக் விபத்தொன்றில் 50 பேர் பலியாகினர் என்றும் 39பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 100 பேருடன் சென்ற 'றக்' வண்டி ஆற்றில் விழுந்ததை அடுத்தே 50 பேரும் மரணமாகினர். (இ)

## சமநீதி இயக்கம் உதயம்

(கொழும்பு)

''சமநீதி இயக்கம்'' என்ற அமைப்பு ஒன்று திரு. பி. கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இன்றைய சமூக அமைப்பில் சகல இன, மொழி, மத, ஜாதி, பேதங்களுக்கும் தீண்டாமை, சீதனக் கொடுமைகளுக்கும், சமூக ஒடுக்குமுறைகளுக்கும் சகல அநீதிகளுக்கும் எதிராக போராடுவதே இதன் நோக்கம் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவ் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: எஸ். நடேசமூர்த்தி, உப தலைவர்: அந்தனி குருஸ், பொதுச்செயலாளர் பி. கே. பாலசுப்ரமணியம், இணைச் செயலாளர்: விஜு-மூர்த்தி, இணைச்செயலாளர்: செல்வி கே. வதனு, பொருளாளர்: ஸ்ரீதர் நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது

## சார்ஜன்ட் நியமனம்

[சுண்டிக்குளி]

யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ் பகுதி பொறுப்பதிகாரியாக யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு. பாலசுப்பரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## யூனிசேவ் நிறுவனம் உதவி

(சங்கானை)

யூனிசேவ் நிறுவனத்தினால் யாழ் மாவட்ட சிறிய பாடசாலைகளுக்கு வழங்கிய துவிச்சக்கரவண்டிகள், உடுப்புகள், மாரிகள், தமிழ் ஆங்கில நூல்கள் மாவட்ட கல்வி அதிபதியினூடாக வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரிக்கு வழங்கப்பட்டு சிறிய பாடசாலை அதிபர்களுக்கு அவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி பீரிஸ் சங்கானை ஸ்தானை அ. மி. த. க. பாடசாலை, காரைநகர் இலாடி சைவத் தமிழ் வித்தியாசாலை, வட்டுக்கோட்டை மேற்கு அ. மி. த. க. பாடசாலை ஆகியவற்றின் அதிபர்களிடம் ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டுள்ளது [இ]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க




ரீப்பொட்
விலை: ரூ. 9/50.

கோப்பை கோப்பையாய் தேநீர் கலக்க
இனிப்பில் இணையற்ற உன்னத பால்
அனைவரும் நாடும் இன்சுவைப் பால்
ரீப்பொட் வழங்கும் கட்டிப் பால்

Grant K & E 4151

விநியோகிப்போர்:
நெஸ்லே தயாரிப்புகளின் விநியோகஸ்தர்களான
சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ் லிமிட்டெட்.

நீகல் REGAL
10-30, 2-15, 4-45, 7-00, 9-30
14-ந் திகதி முதல் 19 வரை
James Mason, Antony Quinn நடித்த
"PASSAGE" "பசேச்"
கொழும்பில் மாதக்கணக்கில் ஓடிய சண்டைப்படம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 930
எம். ஜி. ஆர்.
மீனவ நண்பன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நினைத்தாலே இனிக்கும் (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி ... தேவிகா
பச்சை விளக்கு

லிடோ (யாழ்.நகர்)
Daily 10-30, 2-30, 4-45
7-15 & 9-30
WHITE LINE FEVER
(Color)

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி
கே. ஆர். விஜயா
நாகேஷ்
ராமு (நாய்)
ராமு

8 வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

ராணி 9வது வாரம் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ், சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

சாந்தி 5வது வாரம் பூர்த்தியும் ஹவுஸ்புல் வாரம்
(யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
நம்பியார்
வெண்ணிறஆடை
நிர்மலா - முத்துராமன் -
சுந்தரராஜன்
காட்சிகள் வழமைபோல் நடைபெறும்.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
மேஜர் சுந்தரராஜன் - நாகேஷ்
ஜெயலலிதா - ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சந்திரகாந்த்
இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

மனோகரா (யாழ்ப்பாணம்) 22-10-81 மட்டும்
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
ஏ. வி. எம். ராஜன் நாகேஷ்
A. V. M. தயாரிப்பு
நானும் ஒரு பெண்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி


# துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

## கூட்டணி கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இராணுவச் சிப்பாய்கள் துப்பாக்கிச் சூட்டுமரணம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்ததுடன் அச்சம்பவத்திற்கு கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்திலிருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர் தலிங்கத்துடன் கூட்டணித் தலைவர் திரு சிவசிதம்பரத்துடன் டெலிபோனில் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து கொழும்பில் திரு. சிவசிதம்பரம் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இச்சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்பது எமக்குத் தெரியாது எனினும் மரணம் ஏற்படுத்தியமை, காயம் விளைவித்தமை ஆகிய அர்த்தமற்ற செயலுக்கு எமது கண்டனத்தை உடனே தெரிவிக்கிறோம் என்றும் சம்பந்தப்பட்ட இராணுவ உத்தியோகத்தர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. [இ]

# குடும்பத் தகராறு: இராணுவவீரர் தற்கொலை!

(மன்னார்)

குடும்பத்தகராறு காரணமாக விரக்தியடைந்த முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பேசாலையைச் சேர்ந்த சாமிநாதன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார். குடும்பத் தகராறு காரணமாக மூட்டைப்பூச்சிக்குத் தெளிக்கும் மருந்தைக் குடித்த இவர் மன்னார் அரசினர் ஆஸ்பத்திரிய சாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். மரணவிசாரணை அதிகாரி தற்கொலையென தீர்ப்பளித்தார். (கு)

பாட்டனாரின் மரண அவஸ்தையின்போது

# தேவாரம் பாடிய பேத்தியாரும் மரணம்

(அரியாலை)

பாட்டனாரின் மரண அவஸ்தையின்போது தேவாரம்பாடிய இளம் பெண் ஒருவர் பாட்டனார் இறந்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் மரணமான துக்ககரமான சம்பவம் ஒன்று கோண்டாவில் கிழக்கில் நடைபெற்றது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த க. கையாபிள்ளை என்ற வயோதிபரின் மரண அவஸ்தையின் போது இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தேவாரம் பாடிய குழுவினரோடு சேர்ந்து தேவாரம் பாடிய பின்னர் இறுதித் தேவாரத்தையும் தானேபாடிய திருமதி இலட்சுமிதேவி கிருஷ்ணராசா என்பவரே இவ்வாறு இறந்த பெண்ணாவார். இவர் இரு குழந்தைகளின் தாயாவார்.

காலஞ்சென்ற திருமதி இலட்சுமிதேவி கிருஷ்ணராசா கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண சனசமூக நிலையமாதர் சங்க செயலாளர் ஆவார்.

காலஞ்சென்ற இருவரினதும் இறுதிச் சடங்குகள் ஒரே நேரத்தில் நடாத்தப்பட்டு கோண்டாவில் மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்றன.

## பொதுமக்கள் பாதிப்பு

(சங்கானை)

சங்கானை சந்தைக்குள் பொதுமக்களின் பாவனைக்காக அமைக்கப்பட்டிருக்கும் நீர்விநியோகம் கடந்த சில மாதங்களாக தடைப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## திருமலைக்கோஷ்டி வெற்றி

[அரியாலை]

விளையாட்டுத்துறை அமைச்சினால் மாவட்டங்களுக்கிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை மாவட்டக்கோஷ்டியை எதிர்த்து மன்னார் மாவட்டக்கோஷ்டி மோதிய போட்டியில் திருமலைக் கோஷ்டி 6-1 கோல்களால் வெற்றிபெற்றது. மன்னார் சென் சேவியர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார். [இ]

## பொருட்காட்சி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த யாழ் மாவட்ட கூட்டுறவு மனிசின் பொருட்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களாக பிற் போடப்பட்டுள்ளதாக தேசிய கூட்டுறவு சபை மாவட்ட [செயலாளர் திரு. அ. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (க)

# விளையாட்டுச் செய்திகள்

மேற்கிந்தியதீவுக் கிரிக்கெட் குழுவினருக்கும் ஸிம்பாவே கிரிக்கெட் குழுவினருக்குமிடையே நடைபெற்ற மூன்று நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியக் குழுவினர் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர்.

## ஜமேக்கா வீரர்

பிரிட்டிஷ் அதிபார குத்துச் சண்டை சாம்பியன் போட்டியில் 34 வயதுடைய "ஜமேக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவரான "நெவில் மீக்" வெற்றிபெற்றிருக்கிறார். இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் சாம்பியனான 'கோர்டன் பெறிஸ்' என்பவரை முதலாவது "ரவுண்டி" லேயே அதாவது போட்டி ஆரம்பித்த 2 நிமிடம் 45 செக்கன்களிலேயே தோற்கடித்து ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

## 1லட்சம் ஸ்டேர்லிங்

லண்டனில் நடைபெற்ற வரும் 100,000 ஸ்டேர்லிங் பரிசுக்குரிய உலக 'கோல்ப்' ஆட்டத்தில் அதிறமிக்க அமெரிக்கவீரர்களான ரேபுளோய்ட் 'ஹேல் இர்விக்' ஆகிய இருவரும் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

## நாளைய போட்டி

விளையாட்டு அமைச்சினால் மாவட்டங்களுக்கு இடையே நடாத்தப்பெறும் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையே நாளை போட்டி நாளையும் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான போட்டி இம்மாதம் 30-ம் திகதியும் நடைபெறவுள்ளன.

இங்கிலாந்தைச் சேர்ந்த "செவரியானோ பலஸ்ரேறஸ்" என்பவர் அமெரிக்க வீரரான "பென் கிறென்ஷோ" என்பவரைத் தோற்கடித்ததன் மூலம் உலககோல்ப் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக்கொண்டார். இப்போட்டி லண்டனில் வென்ட்வேர்த் நகரில் நடைபெற்றது.

## செஸ் போட்டி

உலக செஸ் சம்பியனுக்காக 'அனரோலி கார்போவ்' விக்ரர் கோர்ச்னோய்" ஆகியோருக்கிடையேயான ஒத்திவைக்கப்பட்டிருந்த 'செஸ்' போட்டி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இந்த 5வது ஆட்டத்தில் சோவியத் வீரரும் இப்போதைய சம்பியனுமான 'கார்ப்போவ்' தனது பட்டத்தினை காப்பாற்றிக் கொள்ளும் வகையில் முன்னணியில் திகழ்வதாகச் செய்திகள் கூறுகின்றன.

## இந்தியாவிடம் சீனா தோல்வி

கோலாலம்பூரில் நடைபெறும் உலக இன்னைச் சம்பியன் பாட்மின்ரன் போட்டியில் இந்திய வீரரான பிரகாஷ் படுகோனே சீனாவின் அதிசிறந்த வீரரான ஹான் ஜியானை தோற்கடித்து அதிசயிக்கத்தக்க வெற்றியைப்பெற்றுள்ளார்.

– இரத்தினம்

## ஸ்கந்தவரோதய வெற்றி

(அரியாலை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்குமிடையே யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதய கல்லூரி 1-0 கோலால் வெற்றியீட்டியது.


வின்ஸர் இப்பொழுது நடைபெறுகிறது
மகத்தான தீபாவளி வெளியீடு
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஸ்டைல் நடிகர், வசூல் மன்னன் — கேரளத்துப் பைங்கிளி
ரஜனி காந்த் — சீமா (இரு வேடம்)
விஜயகுமார், படாபட், சுருளிராஜன், மனோரமா, மற்றும் பலர் நடித்த
காளி
விறுவிறுப்பான டைரக்ஷன்... I V. சசி
இனிமையான இசையமைப்பு ...இளையராஜா
கருத்தான வசனம் ...'தங்கப்பதக்கம்' மகேந்திரன்
வண்ணப் படப்பிடிப்பு ...தேசியவிருது பெற்ற அஷோக்குமார்
சினிமாஸ்கோப் – கலர்

# வல்லைவெளி முக்கொலை: தேடப்பட்ட 7 பேரும் சரண்!

(புலோலி)

வல்லை உப்புவெளி விளக்க மறியல் கைதிகள் முக்கொலை சம்பவம் தொடர்பாக பொலிசாரினால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் எழுவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில சரணடைந்தனர்.

என். தங்கேஸ்வரன் என். இலங்கேஸ்வரன் ஆர். செலவகுரு கே. சிவராசா என். சச்சிதானந்தம் விவேகானந்தன் சீனிக்குட்டி கே. அருணகிரிராசா ஆகிய ஏழு சந்தேக நபர்களுமே சட்டத்தரணிகளான ஆர். டி. இரத்தினசிங்கம் ஆர் ஸ்ரீசிபாயா எஸ். ஜெயசிங்கம் ஆகியோரால நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில சரண் புகுத்தப்பட்டவர்களாவர்.

கம்பர்மலை துப்பாக்கிச் சூட்டு அறுவர் கொலைச் சம்பவ எதிரிகளான இராசதுரை அப்புத்துரை, இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராசா, சின்னையா தில்லைநடராசா வேலுப்பிள்ளை மகேந்திரன் ஆகியோர் வழக்குவிசாரணைக்காக யாழ் சிறைச்சாலையிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப் பட்டபோது வல்லை உப்புவெளியில் பஸ் மறிக்கப்பட்டு அப்புத்துரை, தேவராசா, துரைராசா ஆகியோர் முகமூடியணிந்த கோஷ்டியினரால் துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் கொலைசெய்யப்பட்டது வாசகர்கள் அறிந்ததே.

இக்கொலை சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. உடகம்பொல தலைமையிலான பொலிஸ் கோஷ்டி சந்தேகநபர்களைத் தேடிவந்தது.

சரணடைந்த இச்சந்தேக நபர்கள் ஏழுபேரையும் இம்மாதம் 20ம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இ

மயிலங்காட்டில்

## மாவாங்க சென்றவரிடம் 15 000 ரூபா கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் மா வாங்கச் சென்றவரிடம் மயிலங்காடு சந்தியில் வைத்து 15,000 ரொக்கப் பணத்தையும் 950 ரூபா காசோலையையும் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மகேந்திரன் என்பவர், சுன்னாகம் பலநோக்கு சங்கத்தின் இருபத்திமூன்றாம் கிளையான ஏழாலை சங்கத்தில் மாவாங்குவதற்காக 15,000 ரூபாவுடனும் காசோலையுடனும் சென்றுகொண்டிருந்தபோதே இக்கொள்ளை நடந்துள்ளது.

மகேந்திரன் ஐயோ ஐயோ! என்று சத்தம் போட்டதைத் தொடர்ந்து ஏழாலை கிளை மனேஜர் வந்து பார்த்தபோது இருவரும் புன்னாலைக்கட்டுவன் வீதியால் சென்றுகொண்டிருந்தார்களாம்.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சுகுணேந்திரன், சார்ஜன்ட் சிவலிங்கம், கான்ஸ்டபிள் கந்தசாமி, ரி குணசிங்கம் ஆகியோர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். மா

## மற்றுமிரு சடலங்களும் ஊருக்கு அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ் கே. கே. எஸ் வீதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்துநேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமான இராணுவச் சிப்பாய் திசேரா (வயது 30) மெக்கானிக் சுனில் பெர்ணாண்டோ ஆகியோரது சடலங்கள் விமானம் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியில நடைபெற்றபிரேத பரிசோதனையின் பின் சடலங்களைப் பொறுப்பேற்ற இராணுவத்தினரும் பொலிசாரும் அவற்றை விமான மூலம் அனுப்பிவைத்தனர்.

இராணு வீரரான திசேராவின் சடலம் அவரது சொந்த ஊரான மத்துகமவுக்கும், மெக்கானிக் பெர்ணாண்டோவின் சடலம் கொழும்பு முகத்துவாரத்துக்கும் விமான மூலம் அனுப்பிவைக்கப்பட்டன.

கடந்த வியாழனன்று இடம் பெற்ற இத்துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின்போது இரத்தினபுரி-குருவிட்டவைச் சேர்ந்த கோப்பரல் ஹேவசம ஸ்தலத்திலேயே பலியானது தெரிந்ததே. மா-இ

சுன்னாகம் பொலிஸ் நிலையம் முன்

# சட்டத்தரணியின் மகன் தாக்கப்பட்டார்; காருக்கும் சேதம்

## ஆனையிறவில் பொலிஸ் கான்ஸ்டபிள்மீதும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்து சட்டத்தரணி ஒருவரின் காரி டிரக்கில் வந்தவர்களால்நேற்று முன்தினம் சேதப்படுத்தப்பட்டதுடன் காரிலிருந்த சட்டத்தரணியின் மகனும் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு வந்த சட்டத்தரணி கே. பரமநாதன் உள்ளே சென்றிருந்த சமயம் 3 டிரக்குகளில் வந்தவர்கள் சட்டத்தரணியின் காரை சேதப்படுத்தினராம். காருக்குள்ளிருந்த சட்டத்தரணியின் மகன் அருள்ராஜாவைப் பலமாக தாக்கினராம்.

இதுபற்றி சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### ஆனையிறவில்

ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் நவரத்தினம் தாக்கப்பட்டு தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆனையிறவில் வைத்தே இவர் தாக்கப்பட்டுள்ளாராம். இது பற்றியும் சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### மாணவர், ஆசிரியர்...

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கலலூரி மாணவர்களும், ஆசிரியர்களும் மானிப்பாயில வைத்து நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளனர்.

### விளையாட்டுப் பொருட்கள் கொள்ளை

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடந்த உதைபந்தாட்டப்போட்டியில் பங்குபற்றி விட்டுத்திரும்புகையிலேயே இத்தாக்குதல் நடந்துள்ளது. இவர்கள் கொண்டு சென்ற சுமார் 5000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. பொன்னுத்துரை நாகரத்தினம் இச்சம்பவம் பற்றி சுன்னாகம் பொலிசில் புகார் செய்துள்ளார் இது தொடர்பாக உதவிப் பொலிஸ் அதிபர் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

கட்டுவன் சந்தியில் வைத்து அடையாளம் காணப்படாத இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நிலைமை மோசமானதால் யாழ் பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

### வங்கி ஊழியர்

சுன்னாகம்வங்கியைச் சேர்ந்த முத்தையா யோகராசா என்பவர் மோட்டார்சைக்கிளில் வந்தபோது தாவடியில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டுள்ளதாக பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. இவரது மோட்டார்வாகனமும் பலத்த சேதமடைந்துள்ளதாம். (மா)

### சங்கானையிலும் தாக்குதல்

(சங்கானை)

சங்கானை சந்தைப்பகுதியிலும் 15ம் திகதி மாலை பல தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இச் சம்பவத்தைத் தொடர்ந்து வர்த்தகர்கள் அவசரம் அவசரமாகக் கடைகளைப் பூட்டினர்.

கார்கள், மினிபஸ்கள், வாகனங்கள் பலத்த தாக்குதலுக்குள்ளாகின.

தனியார் மருத்துவமனையொன்றும் பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. இந்த மருத்துவமனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வைத்திய நிபுணரின் காரும் பலத்த சேதமடைந்துள்ளது.

16ம் திகதி காலையில் சங்கானை சந்தைப்பகுதியிலுள்ள தேநீர்க்கடையொன்றும் தாக்குதலுக்குள்ளாகின, கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. சந்தைக்குவந்த மக்கள் நான்கு பக்கங்களிலும் சிதறியோடினர்.

மானிப்பாய், வட்டுக்கோட்டைப் பகுதிகளிலும் பஸ்கள், மினிபஸ்கள் தாக்குதலுக்குள்ளாகின. (மா-க

### உயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து நிலைமையை நேரில் கண்காணிக்கும் பொருட்டு யாழ் வந்த இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல திஸ்ஸ விரதுங்க யாழ். அதிபருடனும் உயர் இராணுவ அதிகாரிகளுடனும், பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோருடனும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

வட பிராந்திய பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. ஏ. நவரத்தினம், குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவ, கேர்ணல வணசிங்க, பொலிஸ் அதிபர் ஜனுப் மஹத் ஆகியோருடன் இராணுவத் தளபதி ஆலோசனை நடத்தினர்.

மா-இ

### மினி பஸ் விபத்து: பெண் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம்

கோண்டாவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மினி பஸ் விபத்தில காயமுற்ற பெண்மணி ஒருவர் நேற்று ஆஸ்பத்திரியில காலமானர்

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி மாணிக்கம் வயது 40 என்ற பெண்மணியே மரணமானவராவார்.

மா

### நிலைமை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான வீதிகளில் பலர் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த சகலரும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்குப் புகார் செய்துள்ளனர்.

மினி பஸ்கள், பல தனிப்பட்ட வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்பற்ற ஒரு பயங்கர சூழ்நிலை இங்கு நிலவுகிறது. கடைகள் யாவும் பூட்டப்பட்டுள்ளன. நாளாந்த வாழ்க்கை முறை பாதிக்கப்பட்டுள்ளன.

### இராணுவத்தை வாபஸ் பெறுக

வீதிகளில் நடமாடும் இராணுவத்தினரை உடனடியாக வாபஸ் பெறச் செய்து, தேடுதலுக்கு மட்டும் அவர்களைப் பயன்படுத்துமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

(க-இ)

### விபத்தில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாசையூரில் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் 50 வயது நபர் ஒருவர் மரணமானதாகவும், அவரது மகனான 8 வயது சிறுவன் காயமடைந்ததாகவும் தெரிகிறது.

### ரவிராஜின் உடல்நிலை

யாழ்ப்பாணம்

யாழ். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமுற்ற ரவிராஜின் உடல்நிலை மோசமாகியுள்ள அதேவேளையில் யாழ் நீதவான் திரு. ரி. யோகநாதன் அவரது வாக்குமூலத்தை நேற்று மாலை ஆஸ்பத்திரியில வைத்துப் பதிவு செய்தார்.

ரவிராஜின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-மா)


## மரண அறிவித்தல்

### J. E. சவுந்தரராஜா

J. E. சவுந்தரராஜா காலமாகிவிட்டார். இவர் புங்குடுதீவைச் சேர்ந்தவரும் ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பரிமளத்தின் அன்புக்கணவரும், வைத்திய கலாநிதி பிறேமினி அரியரட்ணம் (உதவி வைத்தியர் மார்பு நோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்), வசந்தகுமாரன் (இலங்கை வங்கி கிளிநொச்சி), றதினி அருமைநாயகம் (உயர் நீதிமன்றம் யாழ்ப்பாணம்), திருக்குமாரன் (சாமுவேல் சன்ஸ் லிமிட்டெட் கொழும்பு), சாந்தினி (மெற்றோபொலிற்றன் ஏஜென்சி கொழும்பு), ரவீந்திரகுமாரன் (மெற்றோபொலிற்றன் ஏஜென்சி கொழும்பு), ஆகியோரின் அருமைத் தந்தையும், அரியரெட்னம் (இலங்கை புகையிலைக் கொம்பனி CTC) அருமைநாயகம் (S. K. பிரின்ரேஸ் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாருமாவார் இவரின் பூதவுடல் கொட்டடியிலுள்ள புதிய சேமக்காலையில் ஞாயிற்றுக்கிழமை (18-10-81) காலை 10 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும் உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 43/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

1260



## வெளிநாடு செல்கிறீர்களா?

(1) கடவைச்சீட்டு (PASSPORT) (2) ரிக்கற்
(3) வேறு பிரயாண தஸ்தாவேஜுகள்
யாவும் சுலபமாகவும் மலிவாகவும் பெறுவதற்கு எங்களால் உதவியளிக்கமுடியும்.

விபரங்களுக்கு:
48, மானிப்பாய் வீதி — யாழ்ப்பாணம்

1261


## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 18-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna, தொலைபேசி 7707, 389, 8126.